# 10



# அத் தஸ்கியா



## தஸ்கியா என்றால் என்ன?

தஸ்கியா என்ற அறபுச்சொல் பரிசுத்தப்படுத்தல், சீர்படுத்தல் போன்ற கருத்துக்களைக் கொடுக்கிறது. இஸ்லாமியப் பரிபாஷையில் உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தல் எனும் கருத்தைக் கொடுக்கும் தஸ்கியதுன் நப்ஸ் - என்பதே, சுருக்கமாக தஸ்கியா எனப்படுகிறது. தஸ்கியா என்பதன் மூலம் ஒரு முஸ்லிம் இணைவைத்தல் உள்ளிட்ட சகல மோசமான பண்புகளில் இருந்தும் தனது உள்ளத்தையும் செயல்களையும் பாதுகாப்பதுடன் அல்லாஹ் விரும்பாத சகல செயற்பாடுகள், ஆசைகள், எண்ணங்களில் இருந்தும் உள்ளத்தைக் கட்டுப்படுத்தி அதில் நற்பண்புகளை வளர்த்து அதனைத் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அல்குர்ஆனில் உள்ளத்தின் (நப்ஸ்) மூன்று நிலைகள் பற்றிக் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

1. **நப்ஸுல் அம்மாரா பிஸ் ஸூஃ** எனும் தீமையை ஏவும் மனம். இங்கு நன்மைக்கான தூண்டுதல் இருக்காது. இச்சைகளுக்கும் ஷைத்தானுக்கும் அடிமைப்பட்ட ஒரு நிலை காணப்படும்.

2. **நப்ஸுல் லவ்வாமா** எனும் தன்னையே நொந்துகொள்ளும் மனம். இங்கு இச்சைகளுக்கு எதிரான போராட்டம் இருக்கும். அதேநேரம் இச்சைகள் மிகைத்து பாவங்களில் ஈடுபட்டுவிட்டால் உடனே அதற்காக அந்த மனம் வருந்தும். தன்னையே குறைகூறும். தன் நிலையறிந்து கைசேதப்படும்.

3. **நப்ஸுல் முத்மஇன்னா** எனும் திருப்தியடைந்த மனம். அது பதற்றம், தடுமாற்றம் இன்றி அமைதியான நிலையில் காணப்படும். தீமைக்கான தூண்டுதல் இங்கு மிகக் குறைவாகவே இருக்கும். நன்மைக்கான தூண்டுதலே மிகைத்துக் காணப்படும். இந்த மூன்றாவது நிலையான தீமைகளிலிருந்து பாதுகாக்கப்பட்டதாக உள்ளத்தை அமைத்துக் கொள்வதே தஸ்கியா மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## தஸ்கியாவின் முக்கியத்துவம்

மனிதன் ஈருலகிலும் வெற்றி பெறுவதற்கு உளத்தூய்மை இன்றியமையாதது. உள்ளத்தைப் பாவங்களிலிருந்து பரிசுத்தப்படுத்துவதனூடாகவே இம்மையிலும் மறுமை யிலும் வெற்றி பெற முடியுமென அல்குர்ஆன் கூறுகிறது.

*'நிச்சயமாக யார் அதனை (உள்ளத்தை) தூய்மைப்படுத்துகிறாரோ அவர் வெற்றி பெற்றுவிட்டார். மேலும் யார் அதனை மாசுபடுத்துகிறாரோ அவர் நிச்சயமாக நஷ்டமடைந்து விட்டார்' (91: 9,10)*

இவ்விடயத்தை அல்லாஹ் தனது படைப்புகளான சூரியன், சந்திரன், இரவு, பகல் போன்றவை மீது சத்தியம் செய்துவிட்டுக் குறிப்பிட்டுள்ளமை உள்ளத்தைப் பரிசுத்தப் படுத்துவதன் முக்கியத்துவத்தை மென்மேலும் உறுதிப்படுத்துகிறது.

இறைதூதர்கள் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டதன் பிரதான நோக்கங்களுள் ஒன்றாக, உள்ளங்களை பரிசுத்தப்படுத்தல் அமைந்துள்ளது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பணிகளைப் பற்றிக் குறிப்பிடும் போது அல்லாஹ் தன் அருள் மறையில் இவ்வாறு கூறுகின்றான்.

*'அவன் தான் எழுத வாசிக்கத் தெரியாதோர் மத்தியில் அவர்களில் இருந்து ஒரு தூதரை அனுப்பினான். அவர் அவர்களுக்கு அவனது வேத வசனங்களை ஓதிக் காட்டுபவராகவும் அவர்களை பரிசுத்தப்படுத்துபவராகவும் அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் (ஸுன்னாவையும்) கற்றுக்கொடுப்பவராகவும் உள்ளார்' (62:2)*

சுவனத்துக்குச் செல்வதற்கான ஓர் அடிப்படைத் தகுதியாக உள்ளத்தைப் பரிசுத்தப் படுத்தும் செயற்பாடு அமைந்துள்ளது. இதனை மிகக் கவனமாகக் கையாள வேண்டும். அதனைச் சீரான பாதையில் வழிநடத்தினாலே ஒழிய சுவனத்துக்கான பாதையில் பயணிக்க முடியாது. இதனைப் பின்வரும் குர்ஆன் வசனம் தெளிவுபடுத்துகின்றது.

*'யார் தன் இரட்சன் முன்நிற்பதைப் பயந்து, தன் உள்ளத்தை மனோ இச்சை களிலிருந்தும் தடுத்துக் கொள்கின்றாரோ நிச்சயமாக அவரது புகலிடமாகச் சுவனமே இருக்கும்' (79:40,41)*

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உளத்தூய்மையின் முக்கியத்து வத்தைப் பல்வேறு சந்தர்ப் பங்களில் தன் தோழர்களுக்கு எடுத்தியம்பியுள்ளார்கள். ஒரு முறை ஒருவரின் உள்ளம் சீர்பெறுவதன் முக்கியத்துவத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு உணர்த்தினார்கள்.

*'நிச்சயமாக உடம்பில் ஒரு சதைத்துண்டு உள்ளது. அது சீர்கெட்டுவிட்டால் முழு உடம்பும் சீர்கெட்டுவிடும். அது சீரடைந்து விட்டால் முழு உடம்பும் சீரடைந்து விடும். அதுதான் உள்ளம் ஆகும்' (புகாரி, முஸ்லிம்) என்றார்கள்.*

இஸ்லாத்தில் மிகச் சிறந்த ஜிஹாத்களுள் ஒன்றாக **முஜாஹததுன் நப்ஸ்** எனும் உளப் போராட்டம் கருதப்படுகின்றது. இதனையே கீழ்வரும் ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது.

*'(மல்யுத்தத்தில்) பிறரை வீழ்த்துபவன் பலசாலி அல்லன். கோபத்தின்போது தனது உள்ளத்தைக் கட்டுப்படுத்திக்கொள்பவனே உண்மையான பலசாலி ஆவான்.' (புஹாரி, முஸ்லிம்)*

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அடிக்கடி உளப் பரிசுத்தத்தை அல்லாஹ்விடம் வேண்டிப் பிரார்த்தனை செய்துவந்துள்ளார்கள்.

اللَّهُمَّ آتِ نُفُوسَنَا تَقْوَاهَا، وَزَكِّهَا أَنْتَ خَيْرُ مَنْ زَكَّاهَا، أَنْتَ وَلِيُّهَا وَمَوْلاَهَا.

'யா அல்லாஹ் எமது உள்ளங்களுக்கு இறையச்சத்தைக் கொடுத்துவிடுவாயாக. அதனை நீ பரிசுத்தப்படுத்துவாயாக. நிச்சயமாக நீயே சிறந்த பரிசுத்தப்படுத்துவோனாக இருக்கின்றாய். நீதான் அதன் பொறுப்புதாரியாகவும் எஜமானாகவும் உள்ளாய்' (முஸ்லிம்)

முன், பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே இந்தளவுக்கு உளத்தூய்மைக்காக இறைஞ்சினார்கள் என்றிருந்தால் நாங்கள் இதன்பால் எந்தளவு தேவையுள்ளோராக இருக்கின்றோம் என்பதைச் சிந்தித்தல் வேண்டும்.

எமது செயற்பாடுகள் எவ்வளவு பாரியதாக இருந்தாலும் உளப் பரிசுத்தத்தோடு அவை நிறைவேற்றப்படாதபோது அவற்றுக்கு அல்லாஹ்விடத்தில் எந்தப் பிரயோசனமும் பெறுமானமும் இல்லாமல் போய்விடுகின்றது. அல்லாஹ் எமது ஒவ்வொரு செயலின் போதும் எமது உள்ளத்தையே அவதானிக்கின்றான். எமது வெளித்தோற்றத்தை விட உள்ளமே அல்லாஹ்விடத்தில் முக்கியம் பெறுகின்றது. அபூஹுரைரா (ரழி) அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து அறிவிக்கும் 'நிச்சயமாக அல்லாஹ் உங்களுடைய உடல் களையோ, முகங்களையோ பார்ப்பதில்லை. மாற்றமாக உங்களுடைய உள்ளங்களையே பார்க்கின்றான்' (முஸ்லிம்) என்ற ஹதீஸ் இதனை எமக்கு நன்கு தெளிவுபடுத்துகின்றது.

எனவே, அல்குர்ஆன், ஹதீஸ் காட்டித்தருகின்ற வழிமுறைகளைப் பின்பற்றி முகஸ்துதி, பெருமை, பொறாமை போன்ற இழிகுணங்களிலிருந்து தவிர்ந்துகொள்ளல், பர்ளான கடமைகளை உரியமுறையில் நிறைவேற்றல், நபிலான (உபரியான) வணக்கங்களை நிறைவேற்றல், திக்ர்களில் ஈடுபடல், அல்குர்ஆனை அதிகமாக ஓதுதல், தவ்பா செய்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் ஊடாக எமது உள்ளங்களைப் பரிசுத் தப்படுத்தி ஈருலகிலும் ஈடேற்றம் அடைய முயற்சிப்போம்.

**பயிற்சி**

1. தஸ்கியா என்பதன் மொழிக்கருத்து என்ன?
2. இஸ்லாமிய வழக்கில் 'தஸ்கியதுன் நப்ஸ்' என்பது எதனைக் குறிக்கிறது?
3. தஸ்கியா தொடர்பாக அல்குர்ஆன் ஹதீஸிலிருந்து ஒவ்வொரு ஆதாரத்தை தெரிந்தெடுத்து எழுதுக.
4. அல்குர்ஆன் மனித உள்ளத்தை எவ்வாறு பிரித்துக்காட்டுகின்றது?
5. தஸ்கியாவின் முக்கியத்துவத்தை ஐந்து அம்சங்களினூடாக எடுத்துக்காட்டுக.
6. எம்மில் உளப்பரிசுத்தம் ஏற்படுவதற்காக நாம் கடைப்பிடிக்க வேண்டிய ஐந்து விடயங்களை எடுத்துக்காட்டுக.